


Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை

மனிதனுடைய அகம்பாவத்துக்கு காரணமான அவனுடைய பணம், பாண்டித்தியம் அல்லது பலம் அவனை கர்வம் கொள்ள செய்கிறது, ஆனால் இந்த மமதை உண்மையில் சத்ரு என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது அவனை மிகவும் தொந்தரவு செய்து தவறுகளிலும் ஈடுபட வைக்கிறது.

தன்னை யாரும் எதிர்க்க முடியாது என்று அவன் தவறாக நினைக்கிறான், செய்கிறான். ஆனால் அவனுடைய கெட்ட கர்மாவினால் அவன் கஷ்டங்களை அனுபவிப்பது நிச்சயம். அகம்பாவத்தை கைவிட்டு இருந்தாலே இதையெல்லாம் தவிர்த்து இருக்கமுடியும்.

பகவத்பாத சங்கரர் கூறுகிறார் :-

மனிதன் பணம், யௌவனம், பாண்டித்யத்தின் காரணமாக கர்வப்படக்கூடாது. எல்லாவற்றையும் காலம் எடுத்துச்சென்று விடும். அவை சாஸ்வதமானவையே அல்ல, என்கிறார்..

பகவத் பாதர் போன்ற மஹரிஷிகள் எவ்வளவு அறிவாற்றல் பெற்றிருந்தாலும் துளி கர்வம் கூட இல்லாதவர்கள். அதனால் தான் ஜனங்கள் அவர்களை மஹாபுருஷர்கள் என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஆதலால் எக்காரணத்தைக் கொண்டும் அகம்பாவம் கொள்ளாமல் மனிதன், எளிமையுடன் வாழவேண்டும்.

ஒருவனுடைய சத்துருவும் தொண்டையில் முள் மாதிரி குத்துவதும் ஆன இந்த அகங்காரத்தை அழித்து விட்டு தன்னை கட்டுப்படுத்துவதில் உள்ள சுகத்தை வேண்டுமளவு அடைய ஞானத்தை விரும்பி செல்பவன் நிச்சயம் அறிவான்.

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**


**கேள்வி : ஸ்வாமிஜீ அவசியம் ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும், இல்லாவிடில் நரகம் கிடைக்கும் எனக் கூறுகிறார்கள். இந்தக் காலத்தில் பல அலுவல் காரணமாக காலை, மாலையில் நேரம் கிடைப்பதில்லை. மற்ற நேரங்களில் இறைவழிபாடு செய்தால் இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டாரா?**




**ஸ்வாமிஜீ :** மற்ற அலுவல்களை விழிப்புணர்வுடன் செய்வதற்கு, அந்தந்த இறைவழிபாடுகளை செய்யவேண்டிய நேரத்தில் செய்தேயாகவேண்டும். நாம் எதற்கு முக்யத்வம் தருகிறோமோ, அதற்கு நிச்சயம் நேரம் அமையும். ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள், நேரம் கிடைக்கும். (நொண்டிச்சாக்குகள் வேண்டாமே.)

**கேள்வி : கயாவில் ஶ்ராத்தம் ஒரு முறை செய்துவிட்டால் பிறகு எப்போதும் செய்ய வேண்டியதில்லை என்று பலர் கூறுகிறார்கள். இது சரியா?**

**ஸ்வாமிஜீ :** தவறு. வருடம் தோறும் செய்யப்பட வேண்டிய ஶ்ராத்தம் அதற்குப் பிறகும் செய்யப்பட்டே ஆகவேண்டும். உடல்நிலை சரியின்மை போன்ற தவிர்க்க இயலாத காரணங்களால் செய்ய இயலாமல் போனால் மட்டுமே குற்றம் வராது.



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

**கேள்வி : அவ்யக்தமாக பரம்பொருளை நேரில் உபாஸிப்பது கடினம். ஸர்வ கல்யாண குணங்களும் பொருந்திய ஸர்வேஸ்வரனை உபாஸித்தலே சுலபமான வழி என்று கூறுகிறார்கள். இதில் அவ்யக்தமான பரம்பொருள் என்பது நிர்குணக் கடவுள் என்றும் ஸர்வகல்யாண குணங்களும் பொருந்திய ஸர்வேஸ்வரன் என்பது ஸகுணக் கடவுள் என்றும் பொருள்கொள்வது சரியானதா?**

**ஸ்வாமிஜீ :** தங்கள் எண்ணம் சரியானதே. நிர்குணப் ப்ரஹ்மத்தை குரு மற்றும் ஶாஸ்த்ரங்கள் துணையோடு அறிந்து கொள்வதே நிர்குண உபாஸனை என்றும் ஞானயோக ஸாதனம் என்றும் கூறுவர். அனைத்து நற்குணங்களும் பொருந்திய கடவுளை ஶாஸ்த்ரங்களின் வாயிலாக அறிந்து இடைவிடாது த்யானிப்பதால் மனம் நற்குணங்களால் சிறந்து விளங்கும். ஸகுண ப்ரஹ்ம உபாஸனை மனதை செம்மைப்படுத்தும். நிர்குண ப்ரஹ்ம உபாஸனை நம்மை பந்தத்திலிருந்து விடுவிக்கும். இது பற்றிய விளக்கங்கள் ஶ்ரீமத் பகவத் கீதையில் 12-ஆம் அத்யாயம் 2-வது ஶ்லோகம் முதல் II-வது ஶ்லோகம் வரை தெளிவாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

**கேள்வி: "வேதம் புதுமைசெய்" என்று மகாகவி பாரதியார் கூறுவதன் பொருள் என்ன?**

**ஸ்வாமிஜீ :** நான் இவ்வாறு பொருள் கொள்கிறேன். வேதத்தின் கருத்துக்களை வாழ்க்கையில் நன்கு கடைப்பிடித்து, என்றும் புத்துணர்ச்சி உடையவர்களாக வாழ வேண்டும். "நவோ நவோ பவதி ஜாயமான:" என்று வேதத்தின் ஒரு பகுதியில் கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் என்றும் புதியவர்களாக நாம் விளங்க வேண்டும் என்பதாகும். ஆழ்ந்த அறிவு, விழிப்புணர்வு, அறவழியில் நிற்றல், ஈம்வர பக்தி, நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு கணமும் புத்துணர்ச்சிமிக்கவர்களாய், புதியவர்களாய் வாழ இயலும். ஒழுங்குப்பாடு நிறைந்த வாழ்க்கை என்றும் புதுமையாகும். ஒழுங்குப்பாடற்ற வாழ்க்கையே பழைமை என்று கருதலாம். (வள்ளுவர் கூறும் பழைமை அல்ல) (புதுமை=சீரான வாழ்க்கை. பழமை=மிருக வாழ்க்கை)

(தொடரும்) நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.

20. நதியைக் கை, கால்களால் நீந்தித் தாண்டுவது பாபம். பாபம் என்று கூறிய தர்மசாஸ்த்ரம் நம் உடலைக் காக்கக் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. நீந்திப் போகும்போது வெள்ளம் பெருகினாலும், கை, கால் ஓய்ந்தாலும், மரணம் நேருவது எளிது. தோணியால் அல்லது ஆழமில்லாத நதியைக் காலால் கடந்தபின், கரையேறி உடனே ஆசமனம் செய்யவேண்டும், புண்ய நதியைக் கடந்த பாபம் நிவர்த்தியாகவும், அபசாரத்தை அகற்றி உபசாரம் செய்யவும் இது கூறப்பட்டதுபோலும்.

21. கேளாதிருக்கும்போது வலுவில் எவருக்கும் தர்மத்தையும், வ்ரதத்தையும் கூறலாகாது. அதிலும், பிறவியினாலும் குணத்தினாலும் தாழ்ந்தவனுக்கு நிச்சயமாக கூறக்கூடாது. பசி எடுத்தவனுக்கே உணவளிக்க வேண்டும். அக்கரையுடன் கேட்காதவரிடமும், குணமில்லாதவரிடமும் தர்மத்தைக் கூறினால், அவருக்கு அதில் நம்பிக்கை வராது. அபாத்ரத்தில் வர்ஷித்த பாபம் உபதேசித்தவருக்கு வரும். ஆனால் அவர்கள் முன்னேற, நல்ல தர்மங்களைக் கேட்கும்படியான ஆசையை உண்டு பண்ணி, கேட்ட பின்னர் உபதேசிப்பதே உசிதம்.

22. தேவ விக்ரஹம், குரு, தந்தை, தாய், பெரியோர், பசு இவர்களின் நிழலைக் காலால் மிதிக்கக்கூடாது. நீசர் நிழலையும் மிதிக்கக்கூடாது. தாண்டவும் கூடாது. அவர்களது சக்தி நிழலிலும் சிறிது ப்ரதிபலிக்கின்றது அதை மிதித்தால், அவர்களுக்கே அபசாரம் செய்தது போலாகும். சிவன் வஸிக்கும் கைலாஸ மலையைத் தாண்ட முயற்சித்தான் ராவணன். அதைத் தாண்ட முடியாததுடன், கைலாஸத்தின் அடியில் அகப்பட்டுக் கொண்டு தவிக்க நேர்ந்தது.

23. ஸத்யத்தையே சொல்லவேண்டும். அந்த ஸத்யமும் பிறருக்குத் துன்பத்தையும் அப்ரியத்தையும் உண்டுபண்ணுமானால் அத்தகைய ஸத்யத்தைக் கூறலாகாது. ஒருவனுக்கு ப்ரியமானது என்று பொய்யைக் கூறக்கூடாது. மெய்யெல்லாம் மெய்யல்ல! ஒரு வேடன் பன்றியைத் துறத்தி வந்தான். வழியில் ஒரு ஸத்யவாதி இருந்தார். "இந்தப் பக்கம் பன்றி சென்றதா?" என வேடன் அவரைக் கேட்டான். சென்ற உண்மையைக் கூறினால் வேடன் அதைக் கொல்வான். அந்த பாபத்தில் பாதி ஸத்யவாதிக்கு உண்டாகும். இல்லை எனில் அது பொய்யாகும். ஆதலால் அவர் "கண்டவர் சொல்வரா ? சொல்பவர் கண்டவரா?" என ஸத்யமான பரம் பொருளைப் பற்றிக் கூறினார். ஆதலால் வேடனும் ஜீவ ஹிம்ஸையை விட்டொழித்தான். (தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## சாஸ்திரம் அறிவோம்

**(ப்ரஹ்மஸ்ரீ சாம வேத நித்ய அக்னிஹோத்ரி நங்கநல்லூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சௌத்ரிகள்)**

**கேள்வி :** கைகளில் வலையல்கள் இல்லாமல் கோலம் போடுவது, விளக்கு ஏற்றுவது சரியா ?

**பதில் :** கைகளில் வளையல்கள் அவசியம் போட்டுகொண்டு தான் பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்ய வேண்டும். சிறு வயது பெண் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கைகளில் வளையல் போட்டுக்கொள்ள வேண்டும். கல்யாணம் ஆனா பின் காலில் மெட்டி அவசியம். கால்களில் கொலுசு எல்லா பெண்களும் போட்டு கொள்ள வேண்டும். இவை யாவும் மங்கள சின்னங்கள். பெண் குழந்தைகள் பிறந்தது முதல் மங்கள சின்னங்களை அணிந்து கொள்ள வேண்டும். ஸுமங்கலிகளின் அடையாளங்களாக வளையல், கொலுசு, மெட்டி போன்றவை விளங்குகிறது.

**கேள்வி :** ஆண்கள் விளக்கு ஏற்றலாமா ?
**பதில் :** விளக்கு ஏற்றுதல் என்பது ஒரு பொதுவான தர்மமாகும். இதற்கு ஆண் பெண் பேதமில்லை. பூஜை செய்யும் சமயத்தில் ஆண்களும் விளக்கு ஏற்றலாம். வீட்டு பெண் விளக்கு ஏற்ற முடியாத நாட்களில் ஆண்கள் தாராளமாக பூஜை அறையில் விளக்கேற்றி அவசியம் நித்திய பூஜையை செய்ய வேண்டும்.

**கேள்வி :** ஆண்கள் ஒற்றை வஸ்திரமோ அல்லது இன்றைய கலாசாரமான அரை டவுசர் போட்டுக்கொண்டு ஸ்வாமிக்கு பூஜை அல்லது நைவேத்யம் செய்கிறார்களே இது சரியா ?

**பதில் :** ஒற்றை வஸ்திரம் என்பது சரியான முறை இல்லை. எந்த ஒரு பூஜை, விசேஷங்கள், கர்மாக்கள் என்றாலும் ப்ரஹ்மச்சாரியாக இருந்தால் தட்டு வஸ்திரம் 4 முழம், முதல் 8 முழம் வரை அணிய வேண்டும். அதே நேரத்தில் கல்யாணம் நடந்து கிரஹஸ்தன் ஆகி விட்டால் ஸந்த்யா வந்தனம் செய்யும் பொழுது கூட அவசியம் பஞ்சகச்சம் தான் அணிந்து கொண்டு செய்ய வேண்டும். அதே போல் அவசியம் ப்ரஹ்மச்சாரியாக இருந்தாலும் சரி கிரஹஸ்தனாக இருந்தாலும் சரி வேஷ்டிக்கு மேல் இடுப்பு வஸ்திரம் ஒன்றை அணிந்து கொண்டுதான் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்ய வேண்டும்.
((தொடரும்….)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## குறியும் நெறியும்

**(ஸ்வாமீ பூர்ணானந்தர்)**

**அறியப்படும் பொருளும் அறிபவனும்**

அறிபடுபொருள் (object) ஒருபொழுதும் அறிபவன் (subject) ஆகாது. அதாவது அறியப்படும் பொருள் வேறு. அறிபவன் வேறு. ஒரு பொருளை ஒருவன் அறியும்போது அவன் 'அறிபவன்' எனப்பெயர் பெறுகிறான். அவனால் அறியப்படும் பொருள் 'அறிபடுபொருள்' எனப்படுகிறது. அறிபடுபொருளுக்கு வேறானவனே அதை அறிய முடியும். எனவே 'அறியப்படும்பொருள் எப்பொழுதும் அறிபவன் ஆகாது' என்பது தெளிவு இந்த விதியைக் கொண்டு இப்பொழுது சிந்திப்போம். நம்முடையது என்று நம்மால் அறியப்படும் பொருள்கள் எல்லாம் நாமல்ல - நம்மால் அறியப்படுவதால். எனவே 'நான்' என்பது உடலோ, மனமோ, அறிவோ அல்ல. இவை என்னுடையது என்று அறியப்படுவதால் இவற்றுக்கு வேறாயிருந்து இவற்றை அறிவது எதுவோ, அதுவே 'நான்'. அதையே நமது ஶாஸ்த்ரங்கள் 'ஆத்மா' என்று சொல்கின்றன. அறியப்படும் பொருட்களை எல்லாம் 'அநாத்மா' ஆத்மா அல்லாதவை - என்கின்றன.

**ஆத்ம - அநாத்ம விவேகம்**

ஆத்மா சுய இருப்பு உடையது. அநாத்மா ஆத்மாவைச் சார்ந்து இருப்பது. ஆத்மா சேதன ஸ்வரூபமானது. (உணர்வுருவானது) அநாத்மா ஜடத்தன்மையானது ஆத்மா அறிவுமயமானது. அநாத்மா துக்க வடிவானது. ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம (தைத். உபநிஷத் 2-1) விஜ்ஞானம் ஆநந்தம் ப்ரஹ்ம (ப்ரு உபநிஷத் 3-9-28). இதில் முதல் இரண்டு வாக்கியங்களும் மெய்ப்பொருளின் ஸ்வரூபத்தை விளக்குகின்றன: மூன்றாவது வாக்யம் கடவுளும் ஜீவனும் ஒன்று என்பதைக் கூறும் மஹாவாக்யமாகும். இதன் பொருள் ப்ரஹ்மம் (மெய்ப்பொருள்) தூய இருப்பு (Pure Existence) உடையது. தூய உணர்வு (Pure Consciousness) மற்றும் ஆநந்த (Pure Bliss) மயமானது. அத்தகைய ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்றே என்பதாகும். இது நமது ரிஷிகளால் கண்டறியப்பட்ட உண்மைப் பொருளைப் பற்றிய உண்மையாம். இதுவே நமது எல்லா வேதங்களின் உட்கருத்தாகும். இதை அறிந்தவனே ஞானியாகிறான். இதை அறிந்தவனே எல்லா துன்பங்களையும் கடக்கிறான். கடவுளும் ஜீவனும் ஒன்று என்பது நமது ஸாஸ்த்ரங்களின், ரிஷிகளின் கற்பனை அல்ல. அறிவு பூர்வமானது. இதை நமது யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்திப் பார்க்கலாம்.

(தொடரும்) நன்றி : வேதநெறி வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்

### க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை (காண்டம் 1)
### (1.1.4 அனுவாகம் 4) (19 யஜுஸ்)

நான் உன்னை மித்ரனின் கண்கள் வழியாகப் பார்க்கிறேன். அதைரியப்படாதே. கவலைப்படாதே. உனக்கு ஒரு தீங்கும் நேராது. ப்ராண சக்தி நிரம்பும் வண்ணம், அதற்குத் தக்கவாறு நீ நன்றாக விரிவடைவாயாக. (மேற்கண்ட செய்யுள் யாகம் செய்பவர் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுவதாக அமைந்தது இந்த ஸ்லோகம்)

ஸவித்ரு தேவனால் தூண்டப்பட்டு, அச்வினீ தேவர்களின் புஜங்களினால், உபயோகித்து பூஷணின் கரங்களை பிரியமான அக்னி தேவனுக்கு அர்ப்பணிக்கிறேன்.

(இந்தச் செய்யுளின் முதல்வரி தை.ஸ. 1.1.6, 1.3.1, 1.7.10, 1.8.7, 2.6.4, 4.1.1, 4.1.3, 5.1.1, 5.1.4, 5.6.3, 6.2.10, 6.3.6, 6.4.4, 7.1.11 முதலிய இடங்களில் காணப்படுகிறது. 2வது வரி ஸவித்ரு தேவனால் சிருஷ்டிக்கப்படும் ப்ராண சக்தியைக் குறிப்பிடுகிறது. செயல்பாடுகளுக்கும், ஆனந்தத்திற்கும் அதிபதியான அச்வினீ தேவர்களைப் புஜங்களும் அவற்றால் செய்யப்படும் செயல்களும் குறிக்கின்றன. பிராண சக்தியின் கருவி கரங்கள். இவற்றின் அதிபதி பூஷன் என்னும் தேவன். உள்வாங்கும், வெளிவிடும் மூச்சைக் கட்டுப்படுத்தி, சரிப்படுத்துபவர் இவரே. தெய்வீக மனோசக்தியைக் குறிக்கும் அக்னி தேவனுக்கு ஒழுங்காக சுவாசத்திலிருந்து உற்பத்தியாகும் சக்தி அர்ப்பணமாகிறது. DC இந்தச் செய்யுளுக்குப் பல இடங்களில் வெவ்வேறு பொருள் கூறுகிறார்.)

இந்தப் பாகம் அக்னிக்கும் ஸோமனுக்கும், இது மற்ற தேவர்களுக்கு, இது எங்களுக்காக. நீ எங்களை வளரச் செய்வதற்காகவும், மற்றவர்களுக்கு அர்ப்பணிக்கப் படுவதற்காகவும் இருக்கிறாய். ப்ரபஞ்சத்தின் ஒளிவெள்ளத்தை அதன் பிரகாசத்தை என் முன் பார்ப்பேனாக. விண்ணுலகமும் மண்ணுலகமும் என் உள் வாசஸ் தலத்தை உறுதிப்படுத்தட்டும். (த்ரும் ஹந்தாம் - திடம், வளர்வது. அதாவது விண்ணுலகும், மண்ணுலகும் என் தேகத்தின் உள் இருப்பிடத்தில் உள்ள சக்திகளை வளரச் செய்யட்டும்.) என் உள்ளிருக்கும் இடத்தில் பிரயாணிப்பாயாக . உன்னை அன்னை அதிதியின் மடியில் வைக்கிறேன். அக்னியே! ஆஹுதியைக் காவல் செய்.

(தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# சில உபநிஷத்துக்களின் விளக்க உரை

## श्वेताश्वतरोपनिषत्

**ஶ்வேதாஶ்வதரோபநிஷத்**

**ॐ सहनाववतु । सह नौ भुनक्तु ।**
**सह वीर्यं करवावहै ।**
**तेजस्वि नावधीतमस्तु । मा विद्विषावहै ॥**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥**

**ஓ ஸஹனாவவது | ஸஹ நௌ பு4னக்து |**
**ஸஹ வீர்யம்' கரவாவஹை |**
**தேஜஸ்வி நாவதீ4தமஸ்து மா வித்3விஷாவஹை ||**

**ஓ ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ||**

**प्रथमोऽध्यायः ।**

**ப்ரத2மோ(அ)த்4யாய: |**

**हरिः ॐ ॥ ब्रह्मवादिनो वदन्ति ।**

**ஹரி: ஓ || ப்3ரஹ்மவாதி3னோ வத3ந்தி |**

**किं कारणं ब्रह्म कुतः स्म जाता जीवाम केन क्व च सम्प्रतिष्ठा ।**
**अधिष्ठिताः केन सुखेतरेषु वर्तामहे ब्रह्मविदो व्यवस्थाम् ॥ १॥**

**கிம்' காரணம்' ப்3ரஹ்ம குத: ஸ்ம ஜாதா**
**ஜீவாம கேன க்வ ச ஸம்ப்ரதிஷ்டா2 |**
**அதி4ஷ்டி2தா: கேன ஸுகே2தரேஷு**
**வர்தாமஹே ப்3ரஹ்மவிதோ3 வ்யவஸ்தா2ம் ||1||**

பிரம்மத்தை ஆராயும் ஞானிகள் கேட்கிறார்கள்: இந்த உலகிற்கு காரணம் என்ன? நாம் எதிலிருந்து பிறந்தோம்? எதனால் நாம் வாழ்கிறோம்? எதில் நிலைத்து நிற்கிறோம்? எந்த ஆதாரத்தின் கீழ் நன்மை–துன்பங்களில் வாழ்கிறோம்? பிரம்மத்தை அறிந்தவர்கள் இதை எவ்வாறு விளக்குகிறார்கள்?

**कालः स्वभावो नियतिर्यदृच्छा भूतानि योनिः पुरुष इति चिन्त्या ।**
**संयोग एषां न त्वात्मभावा-दात्माप्यनीशः सुखदुःखहेतोः ॥ २॥**

**கால: ஸ்வபா4வோ நியதிர்யத்3ரு'ச்சா2**

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

**பூ4தானி யோனிః புருஷ இதி சிந்த்யா |**
**ஸம்'யோக3 ஏஷாம்' ந த்வாத்மபா4வா-**
**தா3த்மாப்யனீஶః ஸுக2து3ःக2ஹேதோః ||2||**

காலமா காரணம்? இயற்கை (சுபாவம்) காரணமா? நியதி (விதி) காரணமா? தற்செயலா? பஞ்சபூதங்களா? யோனி (மூலப் பிரகிருதி) காரணமா? அல்லது புருஷனா? இவை அனைத்தும் காரணம் என எண்ணப்படுகின்றன. ஆனால் இவை தனித்து காரணம் அல்ல. ஏனெனில் இவைகளுக்கே ஆத்ம தத்துவம் இல்லாமல், ஆத்மாவும் தனித்து சுக–துக்கங்களுக்கு காரணன் அல்ல.

**ते ध्यानयोगानुगता अपश्यन् देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम् ।**
**यः कारणानि निखिलानि तानि कालात्मयुक्तान्यधितिष्ठत्येकः ॥ ३ ॥**
**தே த்4யானயோகா3னுக3தா அபஶ்யன்**
**தே3வாத்மஶக்திம்' ஸ்வகு3ணைர்னிகூ3டா4ம் |**
**யः காரணானி நிகி2லானி தானி**
**காலாத்மயுக்தான்யதி4திஷ்ட2த்யேகः ||3||**

அவர்கள் தியானயோகத்தின் மூலம் உணர்ந்தார்கள்: தெய்வீகமான ஆத்ம சக்தி, தன் குணங்களால் மறைந்து இருக்கும் அந்த சக்தியை. அந்த ஒரே பரமாத்மா, காலம் முதலான அனைத்துக் காரணங்களையும் ஆட்சி செய்து, அவற்றுக்கு ஆதாரமாக நிற்கிறான்.

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :


https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/


For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |